# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2041/26 - 2017 ඔක්තෝබර් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.10.19

2041/26 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 2/2/1/129.

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்: 4-3/9/2014 ws/226.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 239ஏ ரதுபஸ்வல கிராம அலுவலர் பிரிவில் கல்லோலுவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை நாயகத் திற்குப் பதிலாக கம்பஹா மாவட்ட சிரேஷ்ட நில அளவை அதிகாரியினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப நில வரைபட இலக்கம் கம்3998 மற்றும் 2017.04.24 ஆந் திகதியுடைய வரைபடத்தில் குறிப் பிடப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் 0.1537 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய மில்லகஹவத்த என்றழைக்கப் படும் காணிக்குரிய எல்லைகள்:

வடக்கு: வீதி, (பிரதேச சபை) மற்றும் திரு. ஆர். பீ. விக்கிரமாரச்சி உரிமை கோரும் தெல்கஹவத்த; கிழக்கு: திரு. ஆர். பீ. விக்கிரமாரச்சி உரிமை கோரும் தெல்கஹவத்த மற்றும் ஆ.வ. இல. 3231 இன் துண்டிலக்கம் 01; தெற்கு: ஆ.வ. இல. 3231 இன் துண்டிலக்கம் 01 மற்றும் பி. டபிள்யூ. பியசேன உரிமை கோருகின்ற மில்லகஹவத்த; மேற்கு: பி. டபிள்யூ. பியசேன உரிமை கோருகின்ற மில்லகஹவத்த, வீதி மற்றும் பாதை (பிரதேச சபை)

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கம்பஹா பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தல் வேண்டும்.

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர்

1A - G 26446 - 17 (2017/10)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சீ. பீ. டபிள்யூ. குணதிலக,
பிரதேச செயலாளர்,
கம்பஹா.

பிரதேச செயலகம்,
கம்பஹா,
2017, ஒற்றோபர் 16.

11-223

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: 6/3/7/15/12/5/38.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2007/MV/157G.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2016.02.29 ஆந் திகதிய இலக்கம் 1956/3 ஐக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான கி.வ. 531, குறைநிரப்பி இல. 31, பத்திர இல. 31 ஐக் கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 1007 இன் விஸ்தீரணம் 0.1081 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் காணி எடுத்தல் ஆரம்ப வரைபடத்திற்கேற்ப அது 0.0181 ஹெக்டயார் எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2017, ஒற்றோபர் 11.

11-224

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.